மாலை முரசு

பக்கங்கள் 15

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 31 ஞாயிற்றுக்கிழமை 17.09.2023 அதிர்வு 48

## மரக்கிளை தலையில் விழுந்து மாணவி பலி

**பூண்டுலோயாவில் பரிதாபம்**

மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்றபோது மரக்கிளை முறிந்து தலையில் விழுந்ததில் பாட சாலை மாணவி ஒருவர்

04

**ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு**

# ஜனவரியில் முழுமையாக மாறுகிறது அமைச்சரவை



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை இலக்காகக் கொண்டு அடுத்த வருடம் ஜனவரியில் முழுமையான அமைச்ச ரவை மாற்றம் இடம்பெறவுள்ளது என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அனுர பிரிய தர்சன யாப்பா,

04



## பருத்தித்துறை கடலில் வீழ்ந்து மீனவர் மரணம்

- எஸ்.நிதர்ஷன் -

யாழ்ப்பாணம், பருத்தித்துறை மீன் பிடித் துறைமுகத்தில் இருந்து நீண்ட நாள் மீன்பிடிக்குக் கடலுக்குச் சென்ற கடற்றொழிலாளர் ஒருவர், படகில் இருந்து கடலுக்குள் தவறி விழுந்து உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையைச் சேர்ந்த ஆர்.பி. நிமல் கருணாரத்ன (வயது 44) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தென்பகுதியைச் சேர்ந்த பலநாள் மீன்பிடிப் படகுகள், பருத்தித்துறை துறைமுகத்தில் ஓய்வெடுத்துச் செல்வது வழமையாகும்.

அவ்வாறு நேற்று மாலை ஓய்வின் பின்னர் மீண்டும் ஆழ் கடல் நோக்கிச் சென்ற படகில் இருந்த கடற்றொழிலா ளர் ஒருவர் தவறி கடலில் விழுந்–துள்ளார்.

கடலில் விழுந்தவர் உயிரிழந்த நிலையில்,

04

**திருகோணமலையில் இரு இடங்களில்**

# திலீபனின் ஊர்தி மீது சிங்களக் காடையர்கள் வெறியாட்டம்

**கஜேந்திரன் எம்.பி. உள்ளிட்டோர் மீதும் தாக்குதல்**



- சீ.ஏ.தமிழ்மாறன் -

திருகோணமலையில் இன்று இரு இடங்களில் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது சிங்களவர்களால் மிலேச்சத் தனமான தாக்குதல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

தியாக தீபம் திலீபனின் நினை வேந்தல் ஊர்தி மீது திருகோண மலையின் கப்பல்துறை இராணுவ முகாமுக்கு அருகாமையில் வைத் தும்,

04

# தென் சீனா கடல் வலய வட்ட மேசை மாநாடு ஒக். 24, 25, 26ஆம் திகதிகளில் இலங்கையில்



தென் சீனா கடல் வலய 8 ஆவது ஷென்ஸன் வட்டமேசை மாநாடு எதிர்வரும் ஒக்டோபர் 24, 25 மற்றும் 26ஆம் திகதிகளில் இலங்கையில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு கொழும்பு ஹுனு பிட்டிய கங்காராம விகாரையில் இடம்பெறவுள்ளது.

04

## யானை தாக்கி இருவர் சாவு!



இரு வேறு பிரதேசங்களில் காட்டு யானைகள் தாக்கி இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ள னர் என்று பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

04

## வாழைச்சேனையில் சடலமாக மீட்கப்பட்ட இளம் குடும்பஸ்தர்



- எச்.எம்.எம்.பர்ஸான் -

இளம் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

04

# ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்க நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார் ரணில்



கியூபாவில் நடைபெற்ற "ஜி77 + சீனா" அரசதலைவர்கள் உச்சிமாநாட்டில் கலந்துகொண்ட பின்னர், அமெரிக்காவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இலங்கை நேரப்படி இன்று அதிகாலை நியூயோர்க் நகரைச் சென்றடைந்தார்.

"2030 நிகழ்ச்சி நிரலுக்கான அமைதி, சுபீட்சம், முன்னேற்றம் மற்றும் நிலைபேற்றுத்தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்கான நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை மீண்டும் உருவாக்குதல்" என்ற தொனிப்பொருளின் கீழ் செப்ரெம்பர் 18 முதல் 21 வரை இம்முறை கூட்டத்தொடர் நடைபெறும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி கூட்டத்தொடரில் பங்கேற்று, தனது விசேட உரையை ஆற்றவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 78 ஆவது கூட்டத்தொடருக்கு இணையாக செப்ரெம்பர் 18 ஆம் திகதி நடைபெறவுள்ள, 2030 ஆம் ஆண்டிற்கான மாற்றம் மற்றும் விரைவான நடவடிக்கைகள் என்பவற்றுக்காக உலக தலைவர்களால் வழிகாட்டுதல்கள் வழங்கப்படும் 2023 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உச்சி மாநாட்டின் அரச தலைவர்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார்.

மேலும், அன்று ஜனாதிபதி, உச்சி மாநாட்டில் பங்கேற்கும் பல அரச தலைவர்களுடன் இருதரப்பு கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதுடன், கடல்சார் நாடுகளுக்கான ஆசிய – பசுபிக் தீவு நாடுகள் கலந்துரையாடலிலும் பங்கேற்கவுள்ளார்.

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் விபத்தில் படுகாயம்!



ஹாலி – எல பிரதேச செயலகத்துக்கு முன்பாக வான் ஒன்று வீதியை விட்டு விலகி மதிலில் மோதியதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்து பதுளை பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பிரதேசத்தில் வசிப்பவர்களே இவ்வாறு படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் லுனுகலவில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்றுவிட்டு பண்டாரவளைக்கு இன்று காலை திரும்பிக்கொண்டிருந்தபோதே விபத்தில் சிக்கியுள்ளனர்.

இந்த விபத்தில் தந்தை, தாய் மற்றும் மூன்று மகள்கள் மற்றும் தந்தையின் சகோதரி ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# தயாசிறி நீக்கப்பட்டதைத் தொடர்ந்து செயலாளர் பதவிக்குக் கடும் போட்டி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து தயாசிறி ஜயசேகர நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்தப் பதவியைக் கைப்பற்றுவதற்காக அந்தக் கட்சியில் இருக்கின்ற சிரேஷ்ட உறுப்பினர்கள் மத்தியில் கடும் போட்டி நிலவுகின்றது என கட்சியின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இருந்தும், தான் கட்சியை விட்டுப் போகப்போவதில்லை என்றும், பொதுச்செயலாளர் பதவியை மீண்டும் கைப்பற்றுவதற்காகத் தொடர்ந்து போராடப் போவதாகவும் தயாசிறி கூறியுள்ளார்.

தயாசிறிக்கு ஆதரவாக கட்சிக்குள் ஓர் அணி கிளம்பியுள்ளது. அதற்குத் திலங்க சுமதிபால தலைமை தாங்குகின்றார்.



பொதுச்செயலாளர் பதவியை மீண்டும் தயாசிறிக்குப் பெற்றுக்கொடுக்கும் வரை போராட்டம் ஓயாது என்று திலங்க சுமதிபால தலைமையிலான அணியினர் கூறியுள்ளனர்.

# உள்நாட்டு பிணையங்களின் தரப்படுத்தலை மேலும் தரம் இறக்கியது 'பிட்ச் ரேட்டிங்ஸ்'

உள்நாட்டுப் பிணையங்களின் தரப்படுத்தலை சர்வதேச கடன் தரப் படுத்தல் நிறுவனமான பிட்ச் ரேட்டிங்ஸ் மேலும் தரமிறக்கியுள்ளது.

இதற்கமைய, உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்கமைய புதிய வட்டி வீதத்தின் கீழ் விநியோகிப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ள பிணையங்களின் தரப்படுத்தல் "சி" மட்டத்தில் இருந்து "டி" மட்டத்திற்கு




தரமிறக்கப்பட்டுள்ளது.

இந்த உள்நாட்டு கடனானது, "வரையறுக்கப்பட்ட செலுத்தப்படாத" நிலையிலிருந்து – "செலுத்தப்படாத" நிலைக்கு கீழிறக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, இதுவரை உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் கீழ் விநியோகிப்பதற்கு முன்மொழியப்படாத உள்நாட்டு பிணையங்களின் தரப்படுத் தல் வரையறுக்கப்பட்ட செலுத்தப் படாத நிலை வரை தரமிறக்கப்பட்டுள் ளது.



# அக்கரைப்பற்று ஆஸ்பத்திரிக்குத் தேசிய விருது

(சப்னா றிபாஸ்)

அக்கரைப்பற்று ஆதார வைத்திய சாலை, தாய் மற்றும் பிறந்த குழந்தை பராமரிப்பு தர மதிப்பீடுகளில் மிக சிறப்பான செயற்றிறனுக்கான தேசிய விருதைப் பெற்றுள்ளது.

அத்துடன் நோயாளி பாதுகாப்பு கருதி தீவிர சிகிச்சை பிரிவு சிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொண்டது.

உலக நோயாளி பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார அமைச் சால், 'நோயாளிகளின் பாதுகாப்புக்காக நோயாளிகளை ஈடுபடுத்துதல்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்வில் மேற்படி விருது கிடைப்பெற் றது.

கொழும்பு பண்டாரநாயகக்க சர்வ தேச மாகாநாட்டு மண்டபத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் அசேல குணவர்த்தன தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தி யட்சகர் டாக்டர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் விருதைப் பெற்றுக் கொண்டார்.

# அட்டாளைச்சேனை, பனங்காடு பிரதேச ஆஸ்பத்திரிகளுக்குப் பணிப்பாளர் குழு!

**(நூருல் ஹுதா உமர், றியாஸ் ஆதம்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை மற்றும் பனங்காடு ஆகிய பிரதேச வைத்தியசாலைகளில் நடைபெறும் செயற்றிட்டங்கள் மற்றும் வேலைத் திட்டங்களைக் கண்காணிப் பதற்கு பணிப்பாளர் தலைமையிலான குழு நேற்று விஜயம் செய்தது.

பொதுமக்களினால் அனுப்பி வைக் கப்படுகின்ற அபிப்பிராயங்களும் இதன்போது கேட்கப்பட்டன.

இந்த வைத்தியசாலைகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்தவும் நடைபெறும் வேலைக ளின் தரத்தை பரிசீலிக்கவும் தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவு றுத்தப்பட்டது.



விசேடமாக அட்டாளைச்சேனை பிரதேச வைத்திய சாலையில் துரிதமாக ஆரம்பிக்கப்படவுள்ள பிராந்திய மருந்து விநியோக பிரிவின் வேலைத் திட்டங்க ளையும் பணிப்பாளர் மற்றும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம் மாஹிர் உள்ளிட்ட குழுவினர் பார்வையிட்டனர்.

# தோல்வியின் விளிம்பில் இலங்கை அணி ஆசியக் கிண்ண இறுதியாட்டத்தில் பரிதாபம்

## 50 ஓட்டங்களுள் சுருண்டது

ஆசியக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இலங்கை அணி 50 ஓட்டங்களுள் சுருண்டு படுதோல்வியடையும் நிலையில் உள்ளது.

இன்று பிற்பகல் ஆரம்பித்த இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, இந்தியப் பந்து வீச்சுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

இலங்கையின் முதல் 6 விக்கெட்டுகளும் வெறும் 5.4 ஓவர்களில் 12 ஓட்டங்களுள் வீழ்த்தப்பட்டது.

பின்னர் தொடர்ந்து சிறு நிதானமாக இலங்கை ஆடியபோதும், அடுத்தடுத்து விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது. இறுதியில் 15.2 ஓவர்களில் 50 ஓட்டங்களுடன் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்து பரிதாப நிலையை எட்டியது.

இதன்மூலம் இந்திய அணிக்கு 51 ஓட்டங்கள் என்ற இலகு வெற்றியிலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இலங்கை சார்பாக துடுப்பாட்டத்தில் குசல் மெண்டிஸ் (17), துஷான் ஹேமந்த (13ஆட்டமிழக்காமல்) ஆகியோரே இரட்டை இலக்க ஓட்ட எண்ணிக்கையை எட்டியவர்கள் ஆவர்.

இந்தியப் பந்துவீச்சில், மொஹமட் சிராஜ் 6 விக்கெட்டுகளையும், ஹார்த்திக் பாண்டியா 3 விக்கெட்டுகளையும் பூம்ரா ஒரு விக்கெட்டையும் சாய்த்தனர்.

இச்செய்தி எழுதப்படும்வரை இந்திய அணி துடுப்பெடுத்தாடவில்லை.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**மரக்கிளை...**

தலவாக்கலை – தவலந்தன்ன வீதியில் பூண்டுலோயா, பலுவத்த பிரதேசத்தில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது என்று பூண்டுலோய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த மாணவி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

அக்கரபத்தனை பம்பரகெலே அபகன்லி தோட்டத்தில் வசித்து வந்த விஜயராஜ் திவ்யராணி (வயது 17) என்ற பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த மாணவி கண்டியில் உள்ள உறவினர் வீட்டில் இருந்து தனது தந்தையுடன் அக்கரப்பத்தனை பகுதிக்கு மோட்டார் சைக்கிளில் திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தத்தில் சிக்கியுள்ளார்.

**ஜனவரியில்...**

சுதர்சினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் பிரியங்கர ஜயரத்ன ஆகிய எம்.பிக்களுக்கும் இடையில் சந்திப்பு

இடம்பெற்றது. நிமால் லான்சாவால் உருவாக்கப்படவுள்ள புதிய அரசியல் கூட்டமைப்பு தொடர்பில் பேசுவதற்கே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

புதிய கூட்டமைப்பு தொடர்பிலும் அரசின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பிலும் இங்கு விரிவாகப் பேசப்பட்டன.

அரசின் செயற்பாடுகள் தொடர்பில் கிராமப்புறங்களில் இருக்கின்ற அதிருப்தியை பிரியங்கர ஜயரத்ன அங்கு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினார்.

அப்போது அதற்குப் பதில் வழங்கிய ஜனாதிபதி ஜனவரி மாதமளவில் புதிய அமைச்சரவை மாற்றம் ஒன்று இடம்பெறும் என்ற சைகை ஒன்றை வெளிப்படுத்தினார் என்று தெற்கு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

**பருத்தித்துறை...**

அவரது சடலம் சக கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு, கரைக்குக் கொண்டு வரப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

**யானை தாக்கி...**

அந்தவகையில், மஹாஓயா, பொரபொல பிரதேசத்தில் காட்டு யானை தாக்கி 82 வயதுடைய முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த முதியவர், யாக்கினிகல மலை பகுதிக்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்தபோது இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அதேவேளை, ஹதுன்கம, ஹிம்பிலியாகட பகுதியில் காட்டு யானை தாக்கி 53 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அருகில் உள்ள வீட்டுக்குச் செல்வதாகக் கூறி வீட்டை விட்டுச் சென்ற அவர், வீடு திரும்பாத நிலையில் பிரதேசவாசிகள் மற்றும் வனவிலங்கு அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலின் போதே அவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**தென்சீனா கடல்...**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் ஆரம்ப நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த வட்டமேசை மாநாட்டின் பூர்வாங்க ஏற்பாடு தொடர்பான கலந்துரையாடல் பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்னாயக்கவின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

சீனாவின் ஷென்ஸன் வட்டமேசை மாநாடு வருடாந்தம் நடைபெற்று வருவதோடு ஒற்றுமையுடன் ஒன்றாகப் பயணித்து பட்டுப்பாதையின் ஞானத்தை பெறுவோம் என்ற தொனிப்பொருளின் கீழ் 22 நாடுகளின் பங்கேற்புடன் இம்முறை மாநாடு இலங்கையில் நடைபெறும் என்றும் இதன்போது அறிவிக்கப்பட்டது.

மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி முடிப்பதற்காக தொடர்புடைய அரசாங்க நிறுவனங்களின் ஊடாக நிறைவேற்றப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் இதன்போது ஆராயப்பட்டது.

பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க,பௌத்த மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட தொடர்புள்ள அரச நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார்கள்.

**வாழைச்சேனையில்...**

இந்தச் சம்பவம் இன்று வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி – நாவலடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மனைவி வெளிநாட்டில் வசித்து வரும் நிலையில் இரண்டு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்த 24 வயதுடைய ஐ.எம். பர்ஷாத் எனும் குடும்பஸ்தரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர், உயிரை மாய்த்துக் கொள்ள போதைவஸ்துப் பாவனையே காரணமாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**திலீபனின் ஊர்தி மீது...**

சர்தாபுர சந்திக்கு அருகாமையில் வைத்தும் சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இரு இடங்களிலும் கற்கள், கொட்டன்கள் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல்களில் திலீபனின் திருவுருவப் படமும், அதைத் தாங்கி வந்த வாகனமும் சேதமடைந்துள்ளன.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சிரேஷ்ட சட்டத்தரணி நடராஜா காண்டீபன் மற்றும் செயற்பாட்டாளர்களான கண்ணன், பிரேம் ஆகியோர் மீதும் சிங்களக் காடையர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

“பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்க்க இலங்கையின் தேசியக் கொடியான சிங்கக்கொடியுடன் வந்த சிங்களக் காடையர்களால் இந்த மோசமான தாக்குதல்கள் தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீதும், எம் மீதும் நடத்தப்பட்டுள்ளன” – என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

தியாக தீபம் திலீபனின் 36ஆம் ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு அம்பாறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்திப் பவனி கடந்த 15ஆம் திகதி ஆரம்பமானது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் கல்முனையை நோக்கி அக்கரைப்பற்றின் ஊடாகப் பயணித்த ஊர்தியை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையில் ஒரு குழுவினர் வழிமறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து மாற்று வீதியால் ஊர்தி பயணித்தது.

இந்நிலையில், இன்று திருகோணமலையில் இரு இடங்களில் வைத்து தியாக தீபம் திலீபனின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி மீது சிங்களவர்களால் மிலேச்சத்தனமான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.



## நாவலபிட்டி கெட்டபுலாவில் பாலம் உடைந்துள்ளதால் மக்கள் கவலை!

(மஸ்கெலியா நிருபர்)

நாவலப்பிட்டி கெட்ட புலா கடுகஞ்சேனைக்கு செல்லும் பிரதான சாலையில் குறுக்கே உள்ள பால அத்திவாரம் கடந்த சில நாள்களாக பெய்த கன மழையால் சரிந்து உள்ளன.

இதனால் அந்த வீதியூடாகச் செல்லும் வாகனங்கள் ஆபத்தான நிலையில் சென்று வருகின்றன.

சம்பந்தப்பட்ட அமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபை முன் வந்து உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



## தற்கொலை தினத்தை முன்னிட்டு நிகழ்வுகள்

( வி.ரி.சகாதேவராஜா)



உலக தற்கொலை தினத்தை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் ஒருவார கால சிறப்பு நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 11 ஆம் திகதி உலக தற்கொலை தினமாகும்.

அதனை முன்னிட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் வைத்திய சாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் உளவியலாளர் திருமதி சம்ருத் ஷெரிப்டின், வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணர் டாக்டர்.ஏஜிஎம். ஜீராச் , வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஜே.மதன் மற்றும் வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

தாதிய பொறுப்பு உத்தியோகத்தர. க. அழகரெட்னத்தின் வரவேற்புரையை தொடர்ந்து வைத்தியசாலையின் பணிப்பாளர் தலைமை உரை நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து உளவியலாளரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரை மற்றும் வைத்தியசாலையின் மனநல வைத்திய நிபுணரின் தற்கொலை தடுப்பு தொடர்பான விளக்கக் காட்சிப்படுத்தல் மற்றும் மனநல பிரிவின் சிரேஷ்ட வைத்தியர் டாக்டர் யூ.எல். சராப்டீனின் தற்கொலை தடுப்பு தொடர்பான விரிவுரைகள் இடம் பெற்றன.

## இளைஞர்களுக்கு உளவியல் பயிற்சி

(நூருல் ஹுதா உமர் )



சாய்ந்தமருது மனித மேம்பாட்டு அமைப்பின் ஏற்பாட்டில் அறிவாற்றல் சம்பந்தமான உளவியல் பயிற்சி பட்டறை மாவடிச்சேனை அல்- இக்பால் வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளர் எஸ். ஏ. முஹம்மட் அஸ் லம் ஆலோசனையில் மட்டக்களப்பு மாவட்ட வாழைச்சேனை பிரதேச அமைப்பாளர் இஷட். எப். ஷிஹானி தலைமையில் ஓட்டமாவடி பிரதேச அமைப்பாளர் இஷட். எப். ஷிமானியின் ஒருங்கிணைப்பிலும் இது நடைபெற்றது.

இந்த நிகழ்வில் 70 இற்கும் மேற் பட்ட இளைஞர், யுவதிகள் பங்குபற்றினர்.

இந்த நிகழ்வில் மனித மேம்பாட்டு அமைப்பின் பொதுச் செயலாளர் டப்லியூ. ஷவ்தப் உசைம், காத்தான்குடி இளைஞர் சேவை உத்தியோகத்தர் எ.டப்லியூ. இர்சாத் அலி, மாவடிச்சேனை அல்- இக்பால் வித்தியாலய அதிபர் எம். சி. அய்யூப்கான், அமைப்பின் ஊடக பிரிவுத் தலைவர் என். இம்றி முஹம்மட் என பலர் பங்கேற்றனர்.

இந்த நிகழ்வின் வளவாளராக காத்தான்குடி ஆசிரியர் மத்திய நிலையத்தின் விரிவுரையாளர் எ. றியாஸ் கலந்து கொண்டு விரிவுரையாற் றினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மூளை வள வெளியேற்றம் எதனால்?

மூளைசாலிகள் நாட்டை விட்டு வெளியேறும் பிரச்சினையால் பெரிதும் பாதிக்கப்படும் நாடுகளில் ஒன்றாக இலங்கை மாறி இருப்பது கண்கூடு.

படித்தவர்கள், கற்றறிந்த நிபுணர்கள், மூளைசாலிகள் போன்றோர் பிரகாசமான எதிர்காலத்தை வேண்டி மேற்கு நாடுகளை நோக்கியும், மறுபுறத்தில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளுக்கும் குடிபெயர்ந்து வருகின்றனர். இதனால் இலங்கை தனது மூளைவளத்தை கணிசமாக இழந்து வருகின்றது.

இதையொட்டி புதிய உரிமைக் கோரிக்கை ஒன்றை கியூபாவில் நடைபெற்ற ஜி 77 நாடுகளின் மாநாட்டில் முன்வைத்திருக்கின்றார் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. கல்வி கற்ற மனித மூளை வளத்தை இலங்கை நாடு இழக்கிறது. அதன் பயனை மேற்குலகம் அனுபவிக்கின்றது. ஆகவே இந்த இழப்புக்குரிய நஷ்ட ஈட்டை, அதன் மூலம் பயனடையும் மேற்குலகு இலங்கை போன்ற நாடுகளுக்கு வழங்க வேண்டும் என்று கூறி இருக்கின்றார் அவர்.

இது சாத்தியமானதா, இந்த மூளை வள இழப்பையும், மறுபக்கத்தில் பிற நாடுகள் அதன் மூலம் அடையும் லாபத்தையும் நாடுகள் ரீதியாக எப்படி கணக்கிடுவது, மதிப்பிடுவது என்பவற்றை எல்லாம் பின்னர் பார்க்கலாம். முதலில் இத்தகைய மூளை வள இழப்பை இலங்கை எதிர்கொள்ள யார் காரணம் என்பதை நோக்க வேண்டும்.

மூளை வள இழப்பு என்பது இலங்கைக்குப் புதியதல்ல. பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே வடக்குத் தமிழ் மக்கள் மத்தியில் செறிந்திருந்த கற்றறிந்தவர்களை பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் தமது காலனித்துவ ஆட்சி நிலவிய சிங்கப்பூர், மலேசியா போன்ற பிற இடங்களுக்கு அரச பணிக்காகக் கூட்டிச் சென்றனர். இப்போது அந்த சந்ததிகள் இலங்கைத் தாயகத் தொடர்பையே இழந்துவிட்டன.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொட்டு அடுத்த 10 ஆண்டுகளில் மலையக உழைப்பாளர்கள் சமூகம் இலங்கை அரசின் பேரினவாத சிந்தனை காரணமாக மூடை கட்டி 'ஏற்றுமதி' செய்யப்பட்டது.

1956இல் ஒரு மொழிக் கொள்கை திட்டம் பலவந்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டமையால் உயர் செழுமைமிக்க ஒரு சமுதாயம் நாட்டை விட்டு அகன்றது.

1970களில் ஏற்பட்ட பொருளாதார கட்டுப்பாடு மற்றும் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் காரணமாக ஓர் உயர் குழாம் மக்கள் கூட்டம் இலங்கையை விட்டு வெளியேறியது.

1983 கலவரங்களை அடுத்துக் கட்டவிழ்ந்த பேரினவாதத்தின் கொடூரக் கெடுபிடிப் போக்கால் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட தமிழர்கள் இடம்பெயர்ந்தார்கள். பேரினவாத வெறிப்போக்கு, இலங்கையில் அரச மட்டத்திலிருந்து உள்ளூர்க் கட்டமைப்புகள் வரை தொடர்ந்ததால் அந்த வெளியேற்றம் இன்னமும் தொடர்கின்றது.

இப்போதும் கூட கொவிட்டை அடுத்து அரச ஊழியர்கள் சம்பளமற்ற லீவில் 5 ஆண்டுகளுக்கு 'ஏற்றுமதி' செய்யும்திட்டத்தை அரசேமுன்னின்று முன்னெடுத்தமை மறுக்கக் கூடியதல்ல.

'ஏற்றுமதியாகும்' மூளைவளம் அந்தந்த நாடுகளில் இருந்து, அவற்றின் நாணயத்தில் அனுப்பும் அந்நிய செலாவணிக்காக வாய் பிளந்து காத்திருந்தபடி, வெளிநாடுகளுக்கு மூளைசாலிகளை ஏற்றுமதி செய்வதற்கு அரசே ஊக்கம் வழங்கியது என்பது மறுக்கக் கூடிய விடயமன்று.

இந்த மூளை வள ஏற்றுமதி நிலைமைக்கு முழுக் காரணம் இலங்கையில் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகளும், அவற்றின் பேரினவாதக் கொள்கைகளும்தான். வினையைத் தான் விதைத்து விட்டு, அதனால் விளையும் வினைக்குப் பிற நாடுகளிடம் நஷ்ட ஈடு கேட்பது எந்த வகையில் நியாயம்?

# ஜனாதிபதித் தேர்தல் மட்டுமே ரணிலின் ஒரேயொரு நோக்கு

## சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் தெரிவிப்பு

(த.சுபேசன்)



ஜனாதிபதி தேர்தல் ஒன்றை நோக்கியதாகவே ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் இருக்கின்றனவே தவிர ஏனைய தேர்தல்களை நடத்தும் எண்ணம் அவருக்கு இல்லை என சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் செ.மயூரன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சாவகச்சேரியில் ஊடகங்களை சந்தித்து கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் இடம்பெற்ற போதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல்வேறு காரணங்களைக் கூறி அதனை நிறுத்தி வைத்துள்ளார்.

உள்ளூராட்சி சபை,மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் தற்போது இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

மக்களின் ஆதரவு இன்றிக் கதிரையைப் பிடித்த ஜனாதிபதி தற்போது மக்களுக்கு நல்லது செய்வது போன்று நாடகம் போடுகிறார். ஜனாதிபதி தேர்தல் ஒன்றின் ஊடாக மீண்டும் தானே ஜனாதிபதியாக வருவதற்கான செயற்பாடுகளில் தான் அவர் ஈடுபட்டு வருகிறார்.-என்றார்.

# சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு தேசிய ரீதியாகப் பாராட்டுக்கள்

(நூருல் ஹுதா உமர் )

உலக நோயாளர் பாதுகாப்பு தினத்தை (செப்டம்பர் 17) முன்னிட்டு சுகாதார அமைச்சால் வைத்திய சாலைகளுக்கு இடையில் நோயாளர்களின் பாதுகாப்பை பலப்படுத்தும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

போட்டியில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை தேசிய ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு இரண்டு பாராட்டுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டது.

தேசிய நோயாளர் பாதுகாப்பு தின நிகழ்வுகள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி டாக்டர் அலகா சிங் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் அசேல குணவர்தன ஆகியோரின் முன்னிலையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத் எம். ஹனிபா கலந்து கொண்டிருந்தார்.

நோயாளர்களின் கருத்துக்களை உள்வாங்கி அவர்களின் பங்குபற்றுதலுடன் எவ்வாறு நோயாளர்களுக்கு உயர்தரமான மற்றும் பாதுகாப்பான சுகாதார சேவையை வழங்குதல் எனும் தொனிப் பொருளில் இவ்வருட நோயாளர் பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.




# மலையகத்தில் மதுபான சாலைகள் அமைப்பதற்கு எதிராகப் போராட்டம்

(மஸ்கெலியா நிருபர்)

மலையக பகுதிகளில் அதிக மது பான சாலைகள் அமைப்பதற்கு எதிர்ப் புத் தெரிவித்து, மலையக மக்கள் முன் னணி நேற்று (16) மாலை குயில்வத் தையில் போராட்டத்தில் ஈடுபட்டது.

மலையக மக்கள் முன்னணி தலை வரும் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினருமான வீ.ராதா கிருஸ்ணன் ஆலோசனைக்கமைய போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

மலையக மக்கள் முன்னணியின் மகளிர் அணி பிரதி தலைவியும், முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் சுவர்ணலதா இலங் கேஸ் வரன் தலைமையில் போராட்டம் குயில் வத்தையில் முன்னெடுக்கப் பட்டது.

இந்தப் பகுதி பாடசாலை, ஆலயம் மற்றும் அதிகமாக பொதுமக்கள் நடமா டும் இடம் என்பதால் மதுபானசாலை திறக்கப்படும் பட்சத்தில் அங்கு தற்போது உள்ள அனைத்து அமைதியும் பறிபோய் விடும் என்று இதன் போது சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தப் பகுதியில் மதுபானசாலையை திறக்க அனுமதிக்க மாட்டோம். இதற்கு சரியான தீர்வு கிடைக்காவிட்டால் மிகப் பெரிய போராட்டம் முன்னெடுக்கப்படும் என்று மலையக மக்கள் முன்னணி யின் மகளிர் அணி பிரதி தலைவி சுவர்ணலதா இலங்கேஸ்வரன் தெரி வித்துள்ளார்.



# தமிழ்த்தின மாவட்டப் போட்டிகளில் பட்டிருப்பு மாணவர்கள் சாதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

களுவாஞ்சிகுடி, பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் (தேசிய பாடசாலை) மாணவர்கள் மட்டக்களப்பு மாவட்ட மட்ட தமிழ்மொழி தின போட்டிகளில் இரண்டு முதலாம் இடங்களையும் ஒரு இரண்டாம் இடத்தையும் இரண்டு மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கொண்டனர்.

வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நாட்டிய நாடகம் நிகழ்வில் மாணவர் குழு முதலாமிடத்தையும், தனி நடிப்பு நிகழ் வில் கே.யுகேஸ் முதலாமிடத்தையும், பாவோதல் நிகழ்வில் சு.நிகேஸ் இரண் டாமிடத்தையும், வாசிப்பு போட் டியில்ம. டர் சிகன் மூன்றாமிடத்தையும் பாவோ தல் நிகழ்வில் சி.ஆருத்ரா மூன்றா மிடத்தையும் பெற்றுக் கொண் டனர்.

எழுத்தாக்க போட்டிகளில் கட்டுரை யும் நயந்த பகுதியும் பிரிவு 05 ல் மாகாண மட்டத்தில் பீ.டிலக்சனா முத லாம்இடம் பெற்றுக்கொண்டமை குறிப் பிடத்தக்கது.

# தலை மன்னார் - கொழும்பு ரயிலில் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்தில்

## பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கோரிக்கை

(மன்னார் நிருபர்)

கொழும்பு கோட்டையில் இருந்து தலைமன்னாருக்கான ரயில் சேவை சுமார் 9 மாதங்களின் பின் வெள்ளிக் கிழமை(15) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மன்னார் மாவட் டத்தில் இருந்து கொழும்புக்கு ஆசன முன்பதிவு செய்து பயணம் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல்வேறு தரப்பினரின் தொடர்ச்சியாக கோரிக்கைகளுக்கு அமைவாக ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க மடு திருத் தலத்தில் வைத்து அண்மையில் வழங் கிய வாக்குறுதிக்கு அமைய கொழும் பில் இருந்து தலை மன்னாருக்கு ரயில் சேவை வெள்ளிக்கிழமை(15) ஆரம் பித்து வைக்கப்பட்டது.

கொழும்பு கோட்டையில் இருந்து மாலை 3.55 மணிக்கு புறப்படும் ரயில் அன்றைய தினம் இரவு இரவு 10.48 மணிக்கு தலை மன்னாரை சென்ற டையும்.

பின்னர் காலை 4.15 மணிக்கு தலைமன்னாரில் இருந்து புறப்படும் ரயில் அன்றைய தினம் காலை 10.34 மணியளவில் கொழும்பில் கோட்டை ரயில் நிலையத்தைச் சென்றடையும்.

இந்த நிலையில் முதலாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட ஆசன முன்பதிவு மற்றும் 2 ஆம் வகுப்பு ஆசன முன் பதிவுகளை மேற்கொண்டு மன்னார் மாவட்டத்தில் இருந்து மக்கள் பண யங்களை தொடர முடியும் எனவும் அறிவிக்கப்பட்டது.

எனினும் கொழும்பில் இருந்து தலை மன்னாருக்கு ஆசன முன்பதிவுகளை மேற்கொண்டு மக்கள் பயணங்களை மேற்கொள்கின்ற போதும் தலை மன்னாரில் இருந்து மக்கள் முன்பதி வுகளை மேற்கொண்டு கொழும்புக்குச் செல்ல முடியாத நிலை உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைமன்னார் தொடக்கம் மடு வரை யிலான ரயில் நிலையங்களில் ஆசன முன்பதிவு செய்யக் கூடிய வசதிகள் இதுவரை இல்லை எனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பிரதான ரயில் நிலையத்தில் காணப்பட்ட கணினி வசதிகள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

இதனாலேயே பதிவுகளை முன் னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் மாவட்ட மக்கள் சாதாரண பயண சீட்டுக்களை பெற்று தமது பயணத்தை தொடர்வதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இந்த விடயத்தில் உரியவர் கள் கவனம் எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

# கட்டுரைப் போட்டியில் தெரிவான மாணவர்களுக்கு பரிசளிப்பு





(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய தமிழ் மன்றம் நடத்திய சுதந்திர தின கட்டுரை போட்டியின் பரிசளிப்பு விழா தலைவர் தஸ்தகீர் சுலைமான் தலைமையில் கத்தார் ஒண்டர் பிளஸ் அரங்கில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்பாளர் முஹம்மது உசைன் நிகழ்ச்சியை தொகுத்தார். துணைப் பொதுச் செயலாளர் முஹம் மது உவைஸ் வரவேற்புரையாற் றினார். ஊடகப் பிரிவு செயலாளர் ஹாஜா செயல்பாடு அறிக்கை வாசித்தார்.

பொதுச் செயலாளர் ஷாஹுல் ஹமீது, துணைத் தலைவர் சித்திக் மைதீன், துணைச் செயலாளர் தாஹிர், உறுப்பினர்கள் பஷீர், கமருதீன், அப்துர் ரஹ்மான், முஹம்மது பாருக், தன் னார்வலர் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர்.

போட்டியில் கலந்து கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்களுக்குப் பாராட்டுச் சான் றிதழ்களுடன் அறிவித்த பரிசுத் தொகை யும் வழங்கப்பட்டது.



# வறிய மாணவர்களின் கல்விக்கு வசதி படைத்தோர் உதவ வேண்டும்

(அஸ்ஹர்இப்றாஹிம்)

வறிய மாணவர்களின் கல்விக்கு உதவுவதன் மூலம் சிறந்த கல்வி சமூகத்தை உருவாக்க முடியும். வறிய மாணவர்களது கல்விக்கு வசதி படைத்தவர்கள் உதவ முன்வர வேண்டும்.

இவ்வாறு சம்மாந்துறையில் சமாதான கற்கைகள் நிறுவனம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த புதிய கற்கை நெறிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் உரையாற்றிய நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எல்.றியாஸ் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

வசதி படைத்த மாணவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வத்தை விட வசதி குறைந்த மாணவர்கள் கல்வியில் காட்டும் ஆர்வம் அதிகமாகவே காணப்படுகின்றது.

ஆனால் வசதி குறைந்த மாணவர்கள் தமது குடும்பத்தில் நிலவும் வறுமை காரணமாக கல்வியை இடையில் கைவிட்டு குடும்ப சுமையை குறைக்க கூலி வேலைகளுக்கு செல்ல ஆயத்தமாகின்றனர். இதனால் இந்த மாணவர்களின் எதிர்காலம் இருள்மயமானதாக மாறி சமூகத்தில் பாரிய பிரச்சினைகள் ஏற்படுவதற்கு ஏதுவாகின்றது.

வறிய மாணவர்களின் குடும்ப நிலைமையைக் கருதில் கொண்டு வசதிபடைத்த தனவந்தகர்கள் இந்த மாணவர்களுக்கு உதவி செய்ய முன்வந்தால் அதுவே உலகில் பெரிய மனிதாபிமான உதவியாக இருக்கும்.

இன்றைய மாணவர்களை நாளைய தலைவர்களாக நல்வழிப்படுத்தும் தளங்களாகப் பாடசாலைகள் இருந்து வருகின்றன.



பாடசாலை காலங்களில் மாணவர்கள் கல்வி கற்காமல் வேறு விடயங்ளில் கவனம் செலுத்தி விட்டு பெரியவர்களானதும் கல்வி அறிவூட்டலில் ஈடுபட நினைத்தால் அது முடியாத ஒன்றாகும்.

எனவே உரிய காலத்தில் மாணவர்களுக்குத் தேவையான பாடசாலை கல்வியை வழங்குவதில் பெற்றோர் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.– என்றார்.



# மட்டக்களப்பு சிசிலியா கல்லூரியின் பரிசளிப்பு

(அ.அஸ்வர், பழுவூரான்)

மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய கல்லூரியின்பரிசளிப்பு விழா நேற்று (16) நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் அருட்சகோதரி நித்தாஞ்சலி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சுஜாத்தா குலேந்திரகுமார் கலந்து கொண்டார்.

இதன்போது கற்றல் மற்றும் இணைப்பாட விதான செயற்பாடுகளில் பல்வேறு சாதனை படைத்த மாணவிகள் விருந்தினர்களால் பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் பாடசாலை நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்.






# கல்முனை அல் பஹ்ரியா வித்தி. மாணவர் நாடாளுமன்ற தேர்தல்

**(பாறுக் ஷிஹான்)**

கல்வி அமைச்சின் புதிய சுற்று நிருபம் மற்றும் அறிவுறுத்தல் கோவையின் அடிப்படியில் மாணவர் நாடாளுமன்ற தேர்தல் முறைமை பாடசாலை மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் தேர்தல்கள் திணைக்களமும் கல்வியமைச்சும் இணைந்து பாடசாலைகள் தோறும் மாணவர் நாடாளுமன்றங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அம்பாறை மாவட்டம் கல்முனை கல்வி வலயத்துக்கு உட்பட்ட அல் பஹ்ரியா மகா வித்தியாலயத்தின் 2023 ஆம் ஆண்டுக்கான மாணவர் நாடாளுமன்றம் அமைப்பதற்கான வேட்பு மனுக்கள் கோரப்பட்டு தெரிவுக்கான தேர்தல் நேற்று முன்தினம் பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம். பைசால் தலைமையில் பாடசாலையில் வளாகத்தில் இடம்பெற்றது.

நடைபெற்ற பாடசாலை மாணவ தேர்தல் முறையானது தங்களுக்கு புதுவிதமான அனுபவத்தை தந்ததாகவும் இதன் மூலம் தேர்தல் தொடர்பான தங்களது அறிவையும் ஆளுமையையும் அதிகரிக்க முடிந்ததாகவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

தரம் 6 முதல் 13 வரையுள்ள மாணவர்களிலிருந்து தெரிவு செய்யப்படும் மாணவ பிரதிநிதிகளைக் கொண்டு மாணவர் நாடாளுமன்றம் தாபிக்கப்படும். இதில் சபாநாயகர், பிரதமர், 10 அமைச்சர்கள், 10 பிரதி அமைச்சர்கள் என 95 மாணவத் தலைவர்களை தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதில் மேற்பார்வையாளராக வலயக்கல்வி அலுவலகத்தின் இணைப்பாளர் ஆசிரிய ஆலோசகர் பி.பி.எம் மஹ்ரூப் கலந்து கொண்டார்.

# தோட்ட தொழிலாளர்கள் 6 பேர் குளவி கொட்டுக்கு ஆளாகினர்!

**(மஸ்கெலியா நிருபர்)**

தோட்ட தொழிலாளர்கள் ஆறு பேர் குளவி கொட்டுக்கு ஆளாகியுள்ளனர்.

நேற்று (16) நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்ட பெண் தொழிலாளர்கள் 6 பேரே இவ்வாறு குளவி கொட்டுக்கு ஆளாகினர்.

இவர்கள் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர் என்று மாவட்ட வைத்தியசாலையில் உள்ள அதிகாரி தெரிவித்தார்.

இவர்கள் அனைவரும் தேயிலை கொழுந்து பறித்துக் கொண்டிருந்த வேளை தேயிலை செடிகளின் வேர் பகுதியில் இருந்த குளவி கூடு கலைந்து அங்கு பணியாற்றிய பெண்களை தாக்கியுள்ளது.

# பாசாலை வகுப்பறைக் கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பம்

**(எஸ். சினீஸ்கான்)**

தம்பலகாமம் தாயிப் முஸ்லிம் வித்தியாலயத்தின் கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தேவையான வகுப்பறைக் கட்டடம் இல்லாமல் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்த குறையை நிவர்த்தி செய்யும் முகமாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக்கால் கட்டட நிர்மாண வேலைகள் நேற்று சனிக்கிழமை (16) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கிண்ணியா நகர சபையின் முன்னாள் தவிசாளர் நிவாஸ், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் இமாம் ஆசிரியர், பாடசாலை அதிபர் கஸிருள்ளா உட்பட பலர் கலந்துகொண்டனர்.



# பழமையை மாற்றும் தலைமுறையினர்...

## மரபு வழியே வந்த நவீனம்



மரபும் புதுமையும் ஒரு வட்டத்தின் மீதான சுழற்சி. மரபு என்று சுட்டப்படும் இடத்தை புதுமையும், புதுமை என்ற இடத்தை மரபும் அதன் சுழற்சிப் பாதையில் இயல்பாகவே சந்திக்கின்றன. பொதுவாக நம் எல்லோர்க்கும், 'நான் புதுமையாக எழுதுகிறேன்' என்கிற சிந்தனை இருக்கிறது. அதற்குக் காரணம் நமக்கு முன்னவர் கண்ட கோணத்தில் ஒன்றை நாம் அணுகாமல் மாற்று வழியில் அணுகுவதும், மாற்றுக் கோணத்தில் வெளிக்கொணர முற்படுவதுமே காரணம்.

நாம் சுவாசிக்கும் மூச்சுக்காற்று நமக்குமுன் இன்னொருவரால் சுவா சிக்கப்பட்டதே. நாம் காணும் காட்சிகள் அனைத்தும் முன்பு பலராலும் பார்க் கப்பட்டதே. நம்மளவில் தோன்றும் புதியவை அனைத்தும் அடுத்தவர்க்குப் பழமையாகத் தோன்றும். நம் மளவில் தோன்றும் பழமைகள் அனைத்தும் அடுத்தவர்க்குப் புதுமையாகத் தோன் றின் வியப்பதற்கு ஒன்றுமில்லை.

புதுமையை ஏற்க தெரிந்த
ஒருவருக்கு பழமையை
மதிக்க தெரிய வேண்டும்
மறந்துப் போகாது.....
பழமையென்ற சொல்லுக்குள்
தான் புதுமை வாசம்
செய்கிறது என்பதை
உணர்ந்தாலே போதும்
பழமையின் சிறப்பு
குன்றாது........
பழமையும் புதுமையும்
என்றுமே நம் வாழ்வுக்கு
பக்கபலமாய் இருக்கும்
புதுமையை ஏற்பது
போல் பழமையையும்
என்றும் மறக்க கூடாது........

நவீனத்தை மாற்றுகின்ற இளைஞர்கள் மரபுக்கு ஈடாகுவார்களா? ஐரோப்பியர் காலணித்துவத்தைப் பின்பற்றி வருகின்ற கீழத்தேய நாடுகளுக்கு இடையே அதிகமாக இளைஞர்கள், யுவதிகள் மத்தியில் அவர்களின் நாகரிகமான வாழ்க்கையாக பழமைக்குள் ஒளிந்திருக்கும் புதுமையை பின்பற்றுகின்றனர்.

தமிழர் மரபில் பெண்கள் காதில் அணியும் அணிகலனை தோடு எனக் கூறுவது போல ஆண்கள் தம் காதுகளில் அணிவதை கடுக்கண் என அழைத்தனர்.

தமிழிய மரபின் வாழ்வியல் அம்சங்களை உற்று நோக்கினால் தமிழின் நுட்பமும் வாழ்வியலின் நுட்பமும் சொற்களினாலும் நடைமுறையாலும் விளங்கியிருக்கக் காணலாம். இந்துத் தமிழ் திருமணங்களின் போது மணமகனாகப் போகும் ஆண்மகனுக்கு இக் கடுக்கண் பூணும் வைபவம் ஒரு சடங்காக அமைந்திருந்தது. மணமகனுக்கு தலைப்பாகை வைக்கும் சடங்குக்கு முன் கடுக்கண் பூணும் கிரியை நடக்கும். மணமகனைக் கிழக்கு முகமாக அமர்த்தி விநாயக வழிபாடு செய்து தேங்காய் உடைத்து இக் கடுக்கண் பூட்டு வைபவம் நடந்தது. அது மணமகனின் தாய்மாமனால் நடத்தி வைக்கப்பட்டது.

அக்குபங்சர் என்ற சீன பாரம்பரிய மருத்துவமும் காது குத்துவது கண் பார்வையைப் பிரகாசமாக்கும் என நம்புகிறது. கூடவே காதுக்கும் ஒட்டு மொத்தமான உடல் ஆரோக்கியத் துக்கும் சம்பந்தம் உண்டென்றும் அதனால் தான் காதின் உருவம் தாயின் வயிற்றில் இருக்கும் பூரண வளர்ச் சியடைந்த சிசு ஒன்றின் தோற்றத்தை ஒத்திருக்கிறதென்றும் அக்குபங்சர் மருத்துவம் கூறுகிறது.

ஆனால் தற்காலத்தில் கடுக்கண் அணியும் நிகழ்வுக்குப் பதிலாக இன்றைய இளைஞர்களால் காதுகளில் புதுமை எனும் பெயரில் வித விதமான தோடுகள் அணியும் வழக்கம் ஊடுருவியுள்ளது. மரபின் வழியில் ஆண் குழந்தைகள் காதில் கடுக்கண் அணியும் முறையானது அவர்களது வழக்கத்தில் தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வந்தது. தற்காலத்தில் அதனை தங்களது ஃபேஷன் ஆக ஆண்கள் அணியும் பழக்கம் உருவாகியுள்ளது.

அதேபோல பழங்காலத்தில் பெண்கள் மேற்காதில் வரிசையாக தோடுகளை அணியும் வழக்கமானது தற்காலத்தில் யுவதிகள் உடலில் பாது காக்கப்பட வேண்டிய பாகங்களில் அணியும் வழக்கம் உருவாகி வருகிறது.

நம் முன்னோர்கள் பச்சை குத்தும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். தாத்தா பாட்டிகளின் கைகளில் பார்த்தால் தெரியும். பூக்களையோ, ஏதாவது பெயர்களையோ பச்சை குத்தி யிருப்பார்கள். அதன் மறு வடிவமாகத் தான் இளைஞர்கள் மத்தியில் நாகரிகம் என்ற பெயரில் பிரபலமாகியுள்ளது டாட்டூ.

5 ஆம், 6ஆம் வகுப்பு படித்தி ருந்தால் கூட போதும் டாட்டூ கணிசமான வருமானம் ஈட்டிக் கொடுக்கும்.

தெய்வ வடிவங்கள், கோலங்கள், தேள், பாம்பு போன்ற உருவங்கள், பெயர்கள் போன்றவை பச்சை குத்துதலில் இடம் பெறுகின்றன. குறிப் பாகப் பெண்கள் அழகிற்காகவும் அடையாளத்துக்காகவும் இக்கலையைப் பயன்படுத்தி வருகின்றனர்.

அரசியல் தலைவர்கள்,சின்னங்கள், திரைப்பட நடிக, நடிகையர் படங்களைப் பச்சை குத்திக் கொள்ளும் பழக்கம் இன்றைய இளைஞர்களிடம் காணப் படுகிறது.

தற்பொழுது மருதாணிப் பசை கொண்டு இத்தகைய உருவங்கள் அச்சால் உடலில் வரையப்படுகின்றன. இதனால் பச்சைக் குத்துதல் கலை இன்று வழக்கொழிந்து வருகிறது.

இந்த வழக்கம் பல்லாயிரம் ஆண்டுகளாக நடைமுறையில் இருப்பதாக நம்பப்படுகிறது. சிறை கைதிகள், பணியாள்கள், அடிமைகள் ஆகியோரை அடையாளப்படுத்த பச்சை குத்தப்பட்டது.

பழங்காலஇந்தியர்களைப்போலவே, கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள் ஆகியோரிடமும் இந்த வழக்கம் இருந்தது. நாஜிக்களின் வதை முகாம்களில் யூதர்களுக்கு எண்கள் பச்சை குத்தப்பட்டன. மனிதர்களை அடையாளப்படுத்தவும், அவர்களை சாதி வாரியாக வகைப்படுத்தவும் பச்சை குத்தப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தண்டனை வழுங்கவும், அடிமைப் படுத்தி சிறுமைப்படுத்தவும் பலமுறை அவை பயன்படுத்தப்பட்டன. சில நேரங்களில் அவை உரிமையின் அடையாளமாக பயன்படுத்தும் நோக்கில் தந்தை மற்றும் கணவனின் பெயர்களும் பச்சை குத்தப்பட்டன.

நாகரிக உலகில் மெகந்தி, நகபாலிஷ் என கலப்பட சாயத்தால் பெண்ணின் அழகை காட்டினாலும், மருதாணி கையால் கன்னமும் சிவந்த பெண்களை இப்போதும் பார்க்க முடிகிறது.

எந்த மருதாணி நல்லா சிவக்கும் என்று தேடித்தேடி, ஒவ்வொரு வீடாக பறித்த மருதாணியை, அம்மியில் அரைத்து, குடும்பத்தோடுபோட்டு, அதிகாலையில் கண்விழித்து, கை, கால் கழுவி ஒவ்வொருவராக கேலி செய்து சிரித்து, மருதாணி வாசத்தை முகர்ந்து கொண்டே ஓடி விளையாடிய குழந்தைகளிடம் உள்ள பொறுமை, ரசிப்புத்தன்மை மற்றும் ஒற்றுமை மெகந்தி, டாட்டூஸ் ஒட்டும் குழந்தை களிடம் இல்லையே.

மருதாணி நமது கலாசார அடையாளம். தமிழ் பண்பாடு, நகத்தில் பூஞ்சை கிருமிகள் வராமல் தடுக்கும். தலையில் பொடுகு, சோரியாசிஸ் வராமல் தடுக்கும். உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும். பித்தத்தை தணிக்கும்.

உள்ளங்கை, உள்ளங்கால் போன்ற கனமான தோல் பகுதிகளில் பல்வேறு கிருமிகள் வளர்வதை தடுக்கும். தோலில் ஏற்படும் துர்நாற்றத்தை தடுக்கும். உள்ளங்கை, உள்ளங்கால் வியர்வையை கட்டுப்படுத்தும். தோலில் ஏற்படும் வெண்புள்ளி மற்றும் வெண்படையை கட்டுப்படுத்தும்.

கோயில்கள், கலைக்கூடங்கள், அரண்மனைகளில் இன்னமும் அழியாமல் வாழ்ந்து வரும் பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான ஓவியங்கள் அனைத்துக்கும் மருதாணியே ஆடிப்படை. மருதாணி பெண்ணின் இயற்கையான அழகை வெளிக்காட்டும் கண்ணாடி. பழமையின் வலிமைக்கு சான்று. என்றென்றும் மாறாத தமிழ் கலாசாரத்தின் அடையாளம்.

பழங்காலத் தமிழ் ஆண்மகனார் ஒருவரது தோற்றம் தலையில் குடுமியும் காதில் கடுக்கண்ணும் நெற்றியிலே திருநீறும் மேல் உடல் சட்டை அணியாது வேட்டி அணிந்ததாகவும் இருந்திருக்கிறது.

மறவின் தொடர்ச்சியில் ஆண்கள் தலைமுடியை வளர்த்து குடும்பி கட்டும் வழக்கமானது காணப்பட்டது. அது தற்காலத்தில் இளைஞர்கள் மத்தியில் தலைமுடி வளர்த்து குடும்பி கட்டும் போக்காக மாறி உள்ளதை காணக்கூடியதாக உள்ளது. அதேபோல பெண்கள் கெட்ட விடயங்கள் தங்களை அணுகாது பாதுகாத்துக் கொள்வதற்காக காலில் கறுப்பு நிற கயிறு கட்டும் பழக்கமானது காணப்பட்டது. ஆனால் தற்காலத்தில் கயிறுக்கு பதிலாக காப்பு அணியும் போக்கானது வளர்ந்து வருகிறது.

மேலும் என் முன்னோர்களிடம் வறுமையின் கோரத் தாண்டவத்தால் கிழிந்த ஆடைகளை அணியும் போக்கு காணப்பட்டது ஆனால் தற்கால இளைஞர் யுவதிகள் மத்தியில் ஆடைகளை கிழித்து போடும் நாகரிகமாக இது மாறி உள்ளது.

எம் தமிழ் மக்கள் மத்தியில் தந்தைக்கு தல மகன் தாய்க்கு இளைய மகன் மொட்டை அடித்தல் என்னும் முறை காணப்பட்டது. இக்கால இளைஞர்கள் மத்தியில் திரைப் படங்களில் தாக்கத்தால் மொட்டை அடிக்கும் ரெண்ட் உருவாகியுள்ளது. உதாரணமாக ராகவா லாரன்ஸ் நடிப்பில் உருவாகிய படம்.

எம் முன்னோர்களான பழங்காலத்து பெண்கள்கலைத்துவமிக்கவர்களாகவும் தங்களை தாங்களே இரசிக்கக் கூடியவர்களாகவும் காணப்பட்டனர். இதனால் தங்களை இயற்கையாக அலங்கரித்துக் கொண்டனர். இதற்காக நிறச்சாயங்களை, பூக்களின் சாயங்களைக் கண்களுக்கும் மருதாணி இலையின் சாயங்களை கைகளுக்கும் அலங்கரித்துக் கொள்வதற்காக பயன்படுத்தினர்.

தற்காலத்தில் இப்போக்கானது லிப்ஸ்டிக் பயன்பாடாகவும் நைல் போலீஸ் பயன்படாகவும் மாற்றம் கண்டுள்ளது. நவீனம் என்பது தீயது அல்ல. அதேபோல பழமையானவை என்பது நல்லவையும் அல்ல. அதனை எடுத்துக் கொள்ளும் இன்றைய கால இளைஞர்கள் யுவதிகள் கையிலே இவை தங்கியுள்ளது. எனவே நாகரீக மோகத்தில் உறையாது நல்லவை எவை தீயவை எவை என பிரித்து அறிந்து கொள்வோம்.

கலாச்சாரத்தின் பிறப்பிடமான நமது தமிழ் மனித உறவுகள் கட்டற்ற முறையில் முறையற்ற வகையில் தவறான பாதையில் போகிறனரே, யார் காரணம்? ஆண்களா இல்லை ஆண்களைக் கவரும் பெண்களா? இருபாலரும் ஒரு சேர வழிதவறிச் செல்ல காரணம் என்ன? சமூகமே அப்படித்தான் இருக்கிறது அதனால் தனிமனிதர்கள் இப்படி மாறிவிட்டார்கள் எனலாமா? இல்லை இல்லை தனி மனிதர்களின் மாற்றங்கள் இப்போது சமூகத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறது என்று சொல்ல வேண்டுமா? cultural-deterioration கலாச்சாரத்தை அடியோடு ஆட்டம் காண வைக்கும் இது போன்ற தவறான நடத்தைகளுக்கெல்லாம்மூலக்காரணம் நாகரீகம் என்ற பெயரால் நம் மக்கள் வேறு பாதைக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என்பதே. கலாசாரம் என்றால் என்ன என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதிலேயே பலருக்குத் தெளிவிருப்பதாகத் தோன்றவில்லை. கலாசாரம் என்றால் இந்து மத அடையாளங்களென்றும், அவ்வாறான இந்து மத அடையாளங்கள் எல்லாம் நம்பவேண்டிய அவசியம் இல்லாத பழம்பஞ்சாங்க விஷயம் அல்லது மூட நம்பிக்கை என்றும் பலருக்கு போதிக்கப் பட்டிருக்கிறது, தொடர்ந்து போதிக்கப்பட்டும் வருகிறது.

கலாசாரம் என்பது சமூகத்தை நல்வழியில் கொண்டுபோக உதவும் ஒரு வழிகாட்டும் முறையே ஆகும். வாழ்ந்து காட்டி வழிகாட்டும் முறை என்றால் மிகையில்லை. குடும்பம் என்பது ஒரு சிறிய சமூகம். சமூகம் என்பது ஒரு பெரிய குடும்பம். தனி மனிதர்கள் குடும்பத்தில் எப்படி நடந்து கொள்கிறார்களோ அதுவே சமூக விளைவாகப் பரவும். சமூகத்தில் பரவும் விளைவுகள் யாவும் ஒவ்வொரு தனி மனிதனையும் பாதிக்கும்.

ஒன்றையொன்று பின்னிக்கொண்டிருக்கும் சமூகச் சங்கிலிக்குள்ளேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வாறான வாழ்க்கையில் மொத்த மனிதக் கூட்டத்தையும் சரியான பாதைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகவே மனிதன் என்பவன் இப்படித்தான் வாழவேண்டும் என்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. அத்தகைய கட்டுப்பாடுகளின் படி வழி வழியாக மக்கள் வாழ்வதையே கலாசாரம் என்றழைக்கிறோம்.

ஆதி மனிதன் உணர்ச்சிகளை முறைப்படுத்தி முறையாக வாழ்வதற்கு சரியான வழிதெரியாமல் மனம் போன போக்கில் வாழ்ந்து முட்டி மோதி துன்பங்களை அனுபவித்து போதும் போதும் என்று ஆகி, இந்தப்பாதை சரியில்லை இனிமேல் துன்பமின்றி வாழ இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு சரியான பாதையை வகுத்து, அதற்கான கட்டுப்பாட்டு முறைகளை உண்டாக்கி அதன் படி வாழ்ந்து நிம்மதி அடைந்தான். அவ்வாறு தனக்கு நிம்மதியையும் கொடுத்து மகிழ்ச்சியையும் அதிகரித்த நல்ல வழிமுறைகளை தங்களது சந்ததியினருக்கும் சொல்லிக் கொடுத்தான். அவற்றைப் பின் வரும் சந்ததியினரும் தொடர வேண்டும் என்று வலியுறுத்தி அந்தப் பாதை வழியாகவே பெரும் சமூகத்தை வழிநடத்தினான். அவ்வாறு மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் வாழ பெரியோர்களால் சொல்லிக் கொடுக்கப்பட்டு வழிவழியாகப் பின்பற்றப்படும் வாழ்க்கை முறையே கலாசாரம் என்றழைகப்படுகிறது.

இப்படி நம் தாத்தா சொல்ல அப்பாவும், அப்பா சொல்ல நாமும், நாம் சொல்ல நமது பிள்ளைகளும் ஒரே மாதிரியான வாழ்க்கையை வாழும் பொழுது, துன்பங்களைச் சந்தித்துத் தான் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை இல்லாமல் துன்பங்களை தவிர்த்து வாழ கற்றுக்கொள்கிறோம்.

இந்த வழி தவறு இந்த வழி சரி என்று முதலிலேயே சொல்லப்பட்டு விடுவதால் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்ததே தெரியாமல் வாழ்வின் அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்ந்து சென்று விடுவோம். இப்படித்தான் கலாசாரம் காலம் காலமாக நம்மை வழிநடத்தி வருகிறது.

**தருமலிங்கம் லுகிர்தா,**
ஊடக கற்கைகள் துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# ரஷ்ய போர் விமான தொழிற்சாலைக்கு வடகொரிய ஜனாதிபதி திடீர் விஜயம்!







ரஷ்யாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-உன், அந்த நாட்டின் போர் விமான உற்பத்தி ஆலையை நேரில் பார்வையிட்டுள்ளார்.

இது, தனிமைப்படுத்தப்பட்டு வரும் இரு நாடுகளுக்கும் இடையே தடை செய்யப்பட்ட ஒப்பந்தப் பரிமாற்றத்துக்கான அறிகுறியாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இது குறித்து ரஷ்யா வெளியிட்டுள்ள அறிக்கையில், கொசோமோல்ஸ்க்-ஆன்-அமூர் நகரிலுள்ள போர் விமானத் தொழிற்சாலையை வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-உன் நேற்று முன்தினம் நேரில் பார்வையிட்டார்.

அவருடன், ரஷ்ய துணைப் பிரதமர் டெனிஸ் மான்டுரொவும் அந்தத் தொழிற்சாலைக்குச் சென்றிருந்தார். ரஷ்யாவின் மிக முக்கியமான விமானத் தயாரிப்பு மையங்களில் ஒன்றை வட கொரிய ஜனாதிபதிக்கு காட்டப்பட்டுள்ளது.

அந்த ஆலையில், எஸ்.யு-35 ரக சண்டை விமானமொன்றின் செயல் விளக்கம் கிம் ஜோங்-உன்-னுக்குக் காட்டப்பட்டது.

இது தவிர, சுகோய் எஸ்ஜே-100 பயணிகள் விமானத் தயாரிப்பு ஆலையையும் கிம் ஜோங்-உன் பார்வையிட்டுள்ளார்.

விமானத் தயாரிப்பு மற்றும் பிற துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளை உணர்ந்து வருகிறோம்.

தொழில்நுட்ப தற்சார்பு பெறுவதில் இரு நாடுகளுக்கும் இந்த ஒத்துழைப்பு கைகொடுக்கும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ரஷ்யாவுக்கு வடகொரியா ஆயுதங்களை வழங் கவும், அதற்குப் பதிலாக வட கொரியா வுக்கு முக்கியத்துவம் வாய்ந்த தொழில்நுட்பங்களை ரஷ்யா அளிப்பதற் குமான ஒப்பந்தம் மேற்கொள்ளப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது.

# உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியின் சொத்துக்களை ஏலம் விடுகிறது ரஷ்யா!

உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி உட்பட நூற்றுக்கணக்கான உக்ரைனியர்களுக்கு சொந்தமாக கிரீமியாவில் உள்ள சொத்துகளை விற்கப்போகிறோம் என ரஷ்யா அறிவித்துள்ளது.

அவற்றில் கிரீமியா தன்னாட்சிக் குடியரசிலுள்ள 100 சொத்துக்களை விற்க திட்டமிட்டு வருகிறோம் என ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கமைய, கிரீமியாவிலுள்ள, தேசிய மயமாக்கப்பட்டுள்ள சொத்துக்களை விரைவில் விற்பனை செய்ய இருப்பதாக கிரிமியாவின் நாடாளுமன்ற சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய படைகள் கிரீமியா தீபகற்பத்தை கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்ய அதிகாரிகள் அங்கு தேர்தல் நடத்தி அரசை நிர்வகித்து வருகின்றனர்.

உக்ரைன் அரசியல் தலைவர்களுக்கும், தொழிலதிபர்களுக்கும் சொந்தமான 500 சொத்துக்களை தேசியமயமாக்கிய ரஷ்ய அதிகாரிகள், 815 மில்லியன் ரூபிள் மதிப்பிலான சொத்துக்களை ஏலம் விடப் போகிறோம் என அறிவித்துள்ளனர்.

# ராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு!



இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை விடு விக்கக் கோரி ராமேஸ்வரம் மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதன் காரணமாக சுமார் 800 மீன்பிடி படகுகள் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் நிறுத்தப்படிருந்தன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்படையினரால் கடந்த புதன்கிழமை இரவு எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 17 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 8 பேரும், புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 9 பேருமே இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளனர்.

அவர்களிடம் இருந்து மூன்று மீன்பிடி படகுகளை இலங்கை கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர்.

குறித்த மீனவர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து, எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

இந்தநிலையில், இலங்கை கடற் படையினரால் தொடர்ந்து மீனவர்கள் கைது செய்யப்படுவதைக் கண்டித்து, ராமேஸ்வரம் மீனவர் சங்கத்தினர் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, இலங்கை கடற் படையினர் இந்த ஆண்டில் இது வரையில் 17 இழுவை படகுகளை கைப்பற் றியுள்ளதுடன், 110 இந்திய மீனவர்களை கைது செய்துள்ளனர் என இலங்கை கடற்படை தகவல்கள் தெரிவிக்கின் றன.

# காவிரி தண்ணீரை திறக்குமாறு மத்திய அமைச்சரிடம் கோரிக்கை!

## - முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவிப்பு




காவிரியில் தமிழகத்துக்கு உரிய நீரை கர்நாடகம் உடனடியாக திறந்துவிட உத்தரவிடக் கோரி, மத்திய அமைச்சரிடம் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மனு அளிப்பார்கள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, தண்ணீர்ப் பற்றாக்குறை ஆண்டில், அதற்கேற்ற விகிதாச்சார அடிப்படையில் சம்பந்தப்பட்ட மாநிலங்கள் தண்ணீரைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

தமிழகத்துக்கு உரிய நீரை கர்நாடக அரசு வழங்காததாலும், காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு ஆகியவற்றால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாததாலும், தமிழக அரசு கடந்த ஓகஸ்ட் 14 இல் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனு விசாரிக்கப்பட்டு வருகிறது.

இதற்கிடையில், தமிழகத்தின் கோரிக்கை நியாயமற்றது, தமிழகம் தனது பயிர் செய்கை பரப்பை அதிகரித்துள்ளது என்று ஆதாரமற்ற அறிக்கைகளை கர்நாடக அரசு வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற உண்மைக்குப் புறம்பான அறிக்கைகளை மத்திய அரசு கருத்தில் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி, தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும், நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், மத்திய ஜல் சக்தி அமைச்சரிடம் கோரிக்கை மனு அளிக்க உள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

# ஜம்மு காஷ்மீரில் 3 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை!

இந்திய இராணுவம், ஜம்மு காஷ்மீர் பொலிஸார் மற்றும் புலனாய்வு அமைப்புகளால் மேற்கொள்ளப் பட்ட கூட்டு நடவடிக்கையில், பாரமுல்லா வின் உரி செக்டார், எல்லைக் கட்டுப் பாட்டு கோட்டு பகுதியில் தீவிர வாதிகளின் ஊடுருவல் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்திய இராணுவத்தின் சினார் படைப் பிரிவு இதுதொடர்பில் தனது சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற 3 தீவிரவாதிகள் கொல்லப் பட்டனர். இரண்டு தீவிரவாதிகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தான் நிலையில் இருந்து துப்பாக்கிச் சூடு நடத்தப்படுவதால், மூன்றாவது தீவிரவாதியின் உடலை மீட்பதற்கு இடையூறாக உள்ளது. எனினும் அந்த உடலையும் மீட்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமைதியை நிலைநாட்ட மத்திய அரசு தவறிவிட்டது: காங்கிரஸ் குற்றச்சாட்டு

நாட்டில் அமைதியை நிலைநாட்ட பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசு தவறிவிட்டது என்று காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டி யுள்ளார்.

கார்கே தலைமையில் முதன்முறை யாக கட்சியின் முதல் செயற்குழு கூட்டம் ஹைதராபாத்தில் நேற்று தொடங்கியது.

இந்த கூட்டம் கலந்துகொண்டு உரையாற்றிய கார்கே, மணிப்பூர் மாநில கலவரங்களை தடுக்கவும், மீண்டும் அமைதியை நிலை நாட்டவும் பிரதமர் மோடி அரசு தவறி விட்டது.

மணிப்பூரில் இப்போது கூட கலவரம் ஓயவில்லை. மணிப்பூர் கலவரங்களை நாடு உன்னிப்பாக கவனித்து வருகிறது.

5 டிரில்லியன் பொருளாதாரம், பாரத், புதிய இந்தியா, அம்ருத்கால், இந்தியா உலகிலேயே 3 ஆவதுமிகப்பெரிய வணிக நாடு எனும் பிம்பங்கள் எல்லாம் வெறும் நாடகத்தனமான பேச்சுகள். நாட்டின் சட்டத்துக்கும், ஜனநாயகத் துக்கும், பின்தங்கிய வர்க்கத்தினரின் அடிப்படை உரிமைக்கும் காங்கிரஸ் எப்போதுமே கட்டுப்பட்டு உள்ளது என்று தெரிவித்துள்ளார்.



# கராத்தேயில் 16 பதங்களை வென்றது கல்முனை கார்மல் பற்றிமா கல்லூரி!

## தேசிய மட்டத்துக்கும் தகுதிபெற்றது

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கிழக்கு மாகாண மட்ட கராத்தே சுற்றுப் போட்டியில் கல்முனை கார்மல் பற்றிமா தேசிய கல்லூரி 16 பதக் கங்களைப் பெற்றுள்ளது. இதனடிப் படையில் தேசிய மட்டப் போட்டிக்கும் தகுதிபெற்றுள்ளது.

தென்கிழக்குப் பலகலைக்கழக பிரதான மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கு மாகாண ரீதியிலான கராத்தே சுற்றுப் போட்டியில், இக்கல்லூரி 6 தங்கப் பதக்கங்கள், 4 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 6 வெண்கலப் பதக்கங்களைப் பெற்றது.





# அஸ்-ஸபா வித்தியாலயம் தேசிய மட்டத்துக்குத் தகுதி

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

20 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் திருகோணமலை அஸ்-ஸபா வித்தியாலயம் தேசிய மட்டத்துக்குத் தகுதிபெற்றது.

கிழக்கு மாகாண மட்ட 20 வதுக்குட்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டத் போட்டி மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில், மூன்றாம் இடத்தைப் பெற்று அஸ்-ஸபா வித்தியாலயம் தேசிய மட்டத்துக்குத் தகுதிபெற்றது.

